முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1070

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.09.2022, சனிக்கிழமை

1. கருணைக்கடலே அரங்கா போற்றி
கந்தமகா ஞானியே தேசிகா போற்றி
வறுமைவிரட்டி உலகை மீட்க
வள்ளல்தன்மை கொண்ட சக்தியாய் வந்த குருராஜா போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆசி தனை சுபகிருது வேங்கை திங்கள்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 18 நாள், 03.09.2022 சனிக்கிழமை)
அருளுவேன் அரங்கனுக்கு சக்தி கூட
3. வகைபட அரங்கனை நோக்கி உலகோர்
வல்லமைகொண்டு வரம் கேட்டு வர
மிகையான அருளும் பொருளும்
மேலான பதவிகளும் சுகமும் யோகமும்
4. யோகமொடு இனிதே ஆறுமுகப்பெருமானின்
இணையிலா ஆசியும் கீர்த்தியும் கிட்டி
கிட்டியே உலகோர் சிறக்க நேரும்
குறையில்லாத அரங்கன் வழிகாட்டலின் மூலம்
5. தட்டாது எல்லோரும் ஞானவான்களாகி தரணியை வெல்ல நேரும்
தக்கபடி பாதுகாப்பு கண்டு சிறக்க நேரும்
நேர்மைகொண்டு அரங்கன் ஞானவழி வந்தால்
நிலவுலகம் பெரும் மாறுதலை காணும்
6. வறுமை விலகி வையகமே
வளமும் வல்லமையும் பாதுகாப்பும் கூடி
பேரிடர் பிற துன்பமில்லாத
புண்ணிய பூமியாக மாற்றங்காணும்
7. காணவே அரங்கன் கொள்கை
கலியுகம் ஏற்கப்படவே ஞானபூமியாக
ஞானவான்கள் ஆளுமைக்கு உண்டான
ஞான ஆட்சிக்காலமாகவும் மாற்றங்காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–